# தூதன்

தூதன் 34 மார்ச் 2025 தூது 3

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு,
பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொரி 5:21




Private Circulation only

## தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஆயரம்மா மடல் | 04 |
| இராஸ் அல் கைமா போதகர் மடல் | 07 |
| ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா | 10 |
| ஃபுஜைரா போதகர் மடல் | 12 |
| ஆயரம்மா மடல் - ஃபுஜைரா | 14 |
| செயலர் மடல் | 16 |
| நீங்கள் கிறிஸ்தவரா! | 18 |
| தவக்கால உபவாசம் | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| தெரிந்துகொள்வோம் | 25 |
| லெந்துகால வேதவாசிப்பு | 27 |
| Health Tips | 28 |
| Children's Corner | 31 |
| தமிழ் வேதவகுப்பு - சிறுவர் பகுதி | 35 |
| Birthday Celebrants | 36 |
| Wedding Anniversary | 40 |
| ஆராதனைப் பாடல்கள் | 41 |
| பாரம்பரியப் பாடல்கள் | 42 |
| GREED | 45 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645

Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆண்டவர் தாமே நம்மோடிருந்து இப்புதிய மாதத்திலும் நம் திருச்சபையின் ஊழியங்களையும், நம் குடும்பங்களையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

ஃபுஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா சபைகளின் ஆயர்கள், நமது சபை நிர்வாகஸ்தர்கள், EC அங்கத்தினர்கள் மற்றும் அனைத்து ஊழிய பொறுப்பாளர்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன். கடந்த மாதத்தில் Blood Donation Camp, மற்றும் Choir Sunday ஆசீர்வாதமாக அமைய ஆண்டவர் கிருபை செய்தார். இம்மாதம் நாம் எதிர் நோக்கியுள்ள ஊழியங்கள் மற்றும் சபை வளர்ச்சிப் பணிகளை ஆண்டவர் ஆசீர்வதித்து தருவாராக. குறிப்பாக இம்மாதம் நடைபெறும் Women's Retreat மற்றும் VBS ஊழியங்களை ஆண்டவர் ஆசீர்வதித்து தருவாராக. மார்ச் 5ம் தேதி முதல் நாம் லெந்து நாட்களுக்குள்ளாக பிரவேசிக்கிறோம். இந்நாட்களில் நாம் அதிகமாக ஆண்டவரோடு நெருங்கி வரவும் நமது ஆவிக்குரிய வாழ்வை புதுப்பித்துக்கொள்ளவும் ஆண்டவர் கிருபை செயவாராக.

உமக்கு பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! சங்கீதம் 31:19

O how abundant is your goodness that you have laid up for those who fear you and accomplished for those who take refuge in you, in the sight of everyone! Psalm 31:19

அன்பானவர்களே!

ஞானி ஒருவர் தமது சீடர்களோடு ஆற்றங்கரையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்பொழுது தேள் ஒன்று தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது. ஞானி தேளை எடுத்து கரையில் விட்டார். அது அவரை கொட்டிவிட்டது. மீண்டும் தண்ணீருக்குள் ஓடி விட்டது. அவர் மீண்டும் எடுத்து கரையில் விட்டார். அது மீண்டும் அவரைக் கொட்டியது. பலமுறை அவர் அதை எடுத்து கரையில் விட்டார். ஒவ்வொரு முறையும் அது அவரைக் கொட்டியது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த சீடர்கள் அது கொட்டுகிறது என்று தெரிந்தும் ஏன் மறுபடியும் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டனர். அப்பொழுது, ஞானி அவர்களிடம் “கொட்டுவது தேளினுடைய சுபாவம். நான் மீண்டும் மீண்டும் அதை எடுத்து கரையில் விட்டாலும் அது தன் சுபாவத்தை மாற்றாத போது நான் மட்டும் அதற்கு உதவி செய்யும் என்னுடைய சுபாவத்தை ஏன் மாற்றிக்கொள்ள வேண்டும்” என்றார்.

ஆம். அன்பானவர்களே நாமும் நன்மை செய்யும் நம்முடைய சுபாவத்தை ஒருபோதும் மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நமது ஆண்டவரும் நமது வாழ்வில் எப்பொழுதும் நன்மையானவை களையே நமக்குத் தருகிறார். என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று வாக்கு கொடுத்திருக்கும் ஆண்டவர் தொடர்ந்து நன்மைகளை நமக்கு அருளுவாராக. நம்முடைய தியான வசனமும் சொல்கிறது. உமக்கு பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டுபண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! (சங்கீதம் 31:19).
ஆண்டவர் தரும் நன்மைகளை தியானிப்போம்.

முதலாவது...

1. பயந்தவர்களுக்கு நன்மை செய்யும் ஆண்டவர்.
   God Grants Goodness to those who Fear Him.

சங்கீதம் 31:19 உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

ஆண்டவருக்கு பயந்து நடக்கும் அனைவரையும் அவர் ஆசீர்வதிக்கிறார். யாத்திராகமம் முதலாவது அதிகாரத்தில் 15 முதல் 22 வரையுள்ள வேத பகுதியில் சிப்பிராள், பூவாள் என்ற எபிரேய மருத்துவச்சிகள் பார்வோனுக்கு பயப்படாமல் ஆண்டவருக்குப் பயந்து இஸ்ரவேலருடைய ஆண் பிள்ளைகளைக் காப்பாற்றுகின்றனர். இதினிமித்தம் தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார். மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால் அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படிச் செய்தார். கடவுளுக்கு பயப்படும் பயம் என்பது அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலே ஆகும். நாமும் ஆண்டவருக்குப் பயந்து அவர் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் நம்மையும் நிச்சயமாகவே ஆசீர்வதிப்பார்.

இரண்டாவது..

2. பரிசுத்தவான்களுக்கு நன்மை செய்யும் ஆண்டவர்.

God Grants Goodness to those who are Holy.

2 நாளாகமம் 6:41 தேவனாகிய கர்த்தாவே உமது ஆசாரியர் இரட்சிப்பைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் நன்மையில் மகிழ்வார்களாக.

இந்த வேத பகுதியில் தேவனுடைய ஆலயத்தைக் கட்டி முடித்த பின்பு ஆலயத்தில் நின்று சாலமோன் ராஜா "உமது ஆசாரியர் இரட்சிப்பைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் நன்மையில் மகிழ்வார்களாக" என்று ஜெபிக்கிறார். தேவன் பரிசுத்தர். தமது பிள்ளைகளும் பரிசுத்தராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். தேவன் விரும்பும் பரிசுத்தம் என்பது அவரிடம் பாவங்களை அறிக்கையிட்டு பாவமன்னிப்பை பெற்றுக்கொண்டு தேவ சித்தத்திற்கு அர்ப்பணித்து வாழ்வதே ஆகும். அவ்விதமாக பரிசுத்தமாக வாழும் தமது ஜனங்களை ஆண்டவர் நன்மையினால் மகிழப்பண்ணுவார்.

மூன்றாவதாக..

3. பசியுள்ளவர்களுக்கு நன்மை செய்யும் ஆண்டவர்.

God Grants Goodness to those who are Hungry.

லூக்கா 1:53 பசியுள்ளவர்களை நன்மையால் நிரப்பி ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.

நமது ஆண்டவர் தம்மை வாஞ்சையுடன் தேடும் தமது ஜனங்களுக்கு நன்மை செய்பவர். பசியுள்ளவர்கள் என்ற வார்த்தை தேவையுள்ள எளிய மக்களைக் குறிக்கிறது. தேவையுள்ளவர்கள் ஆண்டவரிடத்தில் வாஞ்சையுடன் கேட்கும் போது ஆண்டவர் நன்மையானதைத் தருகிறார். மத்தேயு 7:11-ல் ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிசியமல்லவா? என்று வாசிக்கிறோம்.

ஆம். அன்பானவர்களே! நாமும் ஆண்டவருக்கு பயந்து நடக்க நம்மை அர்ப்பணிப்போம். அவரண்டை வந்து பரிசுத்தமடைய ஒப்புக்கொடுப்போம். எப்பொழுதும் ஆண்டவரைச் சார்ந்திருந்து தேவைகளை அவருக்குத் தெரியப்படுத்துவோம். கர்த்தர் நன்மையானதைத் தருவார். நாம் ஆண்டவர் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவோம். ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்

Rev.K.சுதாகர்.

சபை போதகர்/தலைவர்.

# ஆயரம்மா மடல்

## வேதாகமப் பெண்களும் எஸ்தரின் ஜெபமும்

வானில் இருள் சூழ்ந்து, வாழ்க்கையில் புயல் அடித்து, நம்பிக்கை இழந்து நிற்கும் போது உதிக்கும் ஒரு நட்சத்திரத்தின் ஒளி எவ்வளவு அழகாய் இருக்கும்! அந்த நட்சத்திரத்தின் ஒளியும், வெப்பமும், அழகும் வாழ்வை மெருகூட்டி அலங்கரிக்குமல்லவா? இத்தகைய ஒரு அற்புதப் பணியை ஒளிமங்கி அஸ்தமனத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த இஸ்ல்ரவேலரின் வாழ்விலும் செய்தாள், எஸ்தர் என்னும் இளமங்கை. அவளது ஜெபத்தைப் பற்றிப் பார்ப்போம்.

எஸ்தர் என்றால் "நட்சத்திரம்" என்பது பொருள். இவளது இயற்பெயர் அத்சாள் (கொழுந்துச் செடி) என்று அர்த்தம். பென்யமீன் கோத்திரத்தானான அபியாயேலின் குமாரத்தி இவள் தனது பெரியப்பா, யாசீரின் குமாரன் மொர்தெகாயால் வளர்க்கப்பட்டாள். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமின் குடிகளைச் சிறைபிடித்துக் கொண்டு போகும் போது எஸ்தரும், மொர்தெகாயும் அடிமையாகக் கொண்டு போகப்பட்டார்கள். அகாஸ்வேரு ராஜாவால் தேர்வு செய்யப்பட்டு அந்த நாட்டிற்கு ராணியாக முடிசூட்டப்பட்டவள்தான் எஸ்தர். அந்த நாட்டில் அநேகம் பெண்கள் இருந்தும் அந்த பாக்கியம் எஸ்தருக்கு கிடைத்தது.

### 1. உபவாசித்து ஜெபித்தாள்:-

எந்தவொரு காரியம் வெற்றி பெற வேண்டுமானாலும் ஜெபம் மிகவும் அவசியமானது. அதுவும் உபவாசித்து ஜெபிப்பது என்பது முக்கியமான ஒன்று. தன்னுடைய யூதகுலத்தை அழிக்க சதி நடக்கிறது என்று தெரிந்தும் என்ன செய்வதென்று முடிவெடுக்க முடியாமல் இருந்தாள். ஆனால் தன் சகோதரனாகிய மொர்தெகாயாவால் சரியான நேரத்தில் உணர்த்தப்படுகிறாள். அப்போது உபவாசித்து ஜெபிக்க வேண்டுமென்று முடிவெடுத்து ஜெபிக்கிறாள்.

அவள் தன் தாதிகளோடு மூன்று நாட்கள் பகலும் இரவும் முழுவதுமாக உபவாசித்து ஜெபித்தாள் என்று வேதம் கூறுகிறது. தன்னோடு கூட ஜெபத்திலே தன் தாதிகளையும் சேர்த்துக் கொள்கிறாள். எஸ்தர் ஒரு சிறந்த தலைவியாக இருந்து தன் தாதிகளையும் ஜெபத்திலே வழிநடத்தி உருவாக்குகிறாள். இது சிறந்த தலைமை பண்புள்ள தலைவியாக மற்ற பெண்களிடமிருந்து வேறு படுத்திக் காட்டுகிறது. நாமும் இதுபோல உபவாசித்து ஜெபிக்கும் போது தேவன் நமக்கு பதிலளிப்பார்.

### 2. உண்மையாய் ஜெபித்தாள் :

எஸ்தர் எந்த சூழ்நிலையிலும் உண்மையாகவும் இருந்தாள். மன ரம்மியமாகவும், பொறுமையோடும், அடக்கத்தோடும் இருந்தாள். இந்த நல்ல குணங்களால் அவள் மற்றவர்களின் பிரச்சனைகளை புரிந்து கொள்ள முடிந்தது. யூதகுல மக்களின் உயிரைக் காப்பாற்ற அவளால் பாரத்தோடு உண்மையாக ஜெபிக்க முடிந்தது. யூத குலத்தை அழிப்பதற்கு ஆமான் சதி செய்து அகாஸ்வேரு ராஜாவிடம் அனுமதி பெற்று முத்திரை மோதிரத்தால் முத்திரையிட்டு சட்டமும் இயற்றப்பட்டாயிற்று. அதை யாராலும் தடை செய்ய முடியாது. இது உலகறிந்த உண்மை. ஆனால் எஸ்தரின் உண்மையான ஜெபம் மனதார அந்த மக்களுக்காக பாரத்தோடு, தன்னுடைய ஜனங்கள் இந்த தேசத்திலே அழிக்கப்பட்டு விடக்கூடாது என்று அவள் உண்மையாக ஜெபித்தாள். அந்த ஊக்கமான ஜெபத்திற்கு தேவன் பதிலளித்தார். அந்த ஜனங்கள் காப்பாற்றப் பட்டார்கள், நாமும் அதுபோல உண்மையாய் ஜெபிக்கும் போது தேவன் பெருக்கமான பதிலளிப்பார்.

### 3. ஊக்கமாக ஜெபித்தாள் :

எஸ்தர் ராணியாக இருந்ததால் அந்த ஜனங்கள் அழிக்கப் பட்டிருந்தாலும், எஸ்தர் காப்பாற்றப்பட்டிருக்கலாம். ஆனால் தான் மட்டும் காப்பாற்றப்பட வேண்டுமென்று எஸ்தர் நினைக்கவில்லை. தன்னை சார்ந்த ஜனக் கூட்டமும் காப்பாற்றப்பட வேண்டுமென்று ஊக்கமாக ஜெபித்தாள். முழு முயற்சியோடு என்ன செய்ய வேண்டுமென்று யோசித்தாள்.

ஜெபத்தால் மட்டுமே மேற்கொள்ள முடியுமென்று புரிந்துகொண்டு அதற்காக அரை குறை மனதோடு அல்ல, முழுமனதோடு ஊக்கமாக ஜெபித்தாள். விடாபிடியான ஜெபம் அது. ஒருவேளை அவள் ராணியாக இருந்ததினால் தன்னுடைய அதிகார பதவியினால்கூட அந்த ஜனங்களைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால் அவள் அப்படிச் செய்யவில்லை. தன்னுடைய ஊக்கமான ஜெபத்தினால் அவர்களைக் காப்பாற்ற முடியும் என நம்பி செயல்பட்டாள். அது போல நம்முடைய வாழ்க்கையிலும் எவ்வளவு தடைகள் இருந்தாலும் நம்முடைய உபவாசமுள்ள, உண்மையான மற்றும் ஊக்கமான ஜெபத்தின் மூலம் காரியத்தை ஜெயமாக மாற்ற முடியும். ஜெபத்தின் மீது மட்டுமே நம்பிக்கை வைத்தால் வெற்றி நிச்சயம்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய்.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - மார்ச் 2025

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-03-2025 | தபசு நாட்கள்: மீட்பிற்கான காலம் | ஏசாயா 58:1-8 | ரோமர் 2:1-13 | யோவான் 5:1-9 | 6 |
| 05-03-2025 | சாம்பற் புதன் | 1 இராஜா. 17:12-24 | பிலிப்பியர் 2:1-11 | மாற்கு 8:31-38 | 102 |
| 09-03-2025 | பெண்கள் ஞாயிறு | நீதிமொழி. 31:10-31 | அப்போ. 9:36-43 | மத்தேயு 25:1-13 | 45 |
| 16-03-2025 | பாவ பாரத்திலிருந்து விடுதலை | 2 சாமுவேல் 12:1-14 | அப்போ. 8:9-25 | மாற்கு 2:1-12 | 32 |
| 23-03-2025 | எல்லைகளைத் தாண்டிய விசுவாசத்தை அங்கிகரித்தல் | ஏசாயா 44:28 - 45:8 | அப்போ. 10:24-33 | மத்தேயு 15:21-28 | 125 |
| 30-03-2025 | ஒடுக்குகிற கட்டமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்தல் | நாகூம் 1:1-15 | அப்போ. 4:32-37 | லூக்கா 13:10-17 | 113 |

# இராஸ் அல் கைமா போதகர் மடல்

அன்பிற்கினிய திருச்சபையின் அன்பர்களே, ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் புதிய மாதத்தின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சபை கால அட்டவணையில் சாம்பல் புதன்கிழமையில் இருந்து உயிர்த்தெழுதல் நாள் வரையிலும் உள்ள 46 நாட்களில் ஆறு ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக 40 நாட்கள் லெந்துகாலமாக ஆசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு மார்ச் 5 முதல் ஏப்ரல் 19 வரை லெந்துகாலத்தை அனுசரிக்கவுள்ளோம். “லெந்து காலம்” ஆண்டவர் நம்மை மனந்திரும்ப அழைக்கும் காலம். “லெந்து காலம்” நம்மை ஆராய்ந்து அறிந்து, தீயவற்றை விடுத்து நாம் தூயவர்களாக வாழ முயலுகின்ற காலம். லெந்து காலத்தில் மனந்திரும்புதலைக் குறித்து அதிகமாகச் சிந்திப்பது திருச்சபையின் மரபு. மனமாற்றத்திற்கு “தன்னிலை உணருதல்” மிக அவசியமாகிறது. ஆகவே இந்த மாதம் லெந்துகால ஆரம்பிக்கவுள்ளதால் லெந்துகாலத்தைக் குறித்து தியானிப்போம்.

“உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள், உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்”. ஏசாயா 1:16

### லெந்து காலம் பொருள்:

லெந்துகாலத்தைக் குறிக்கும் 'Lent' என்கிற ஆங்கில வார்த்தையின் பொருள் “இளவேனிற்காலம்” அல்லது “வசந்த காலம்” ஆகும். வசந்த காலத்தில் மரங்களிலுள்ள பழுத்த, மரத்திற்கு பயனற்ற இலைகள் உதிர்ந்து, புதிய தளிர்கள் தோன்றி, பூவும், பிஞ்சும், அரும்பி, காயும் கனியும் காண வழி வகுப்பது போன்று, நம்முடைய வாழ்விலும் லெந்து காலத்தில் நம் வாழ்விற்குப் பயனற்ற பாவ சிந்தனைகள், தீய செயல்பாடுகள் உதிர்ந்து நல்ல சிந்தனைகள் தோன்றி, நல்ல செயல்பாடுகளைக் கடைப்பிடித்து, நற்கனி கொடுப்பவர்களாக வாழ நம்மை உருவாக்குகின்ற “ஆவிக்குரிய வசந்தகாலமே” லெந்து காலம். லெந்து காலத்தில் “நோன்பு” என்ற சொல் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. “உண்ணும் உணவையும் குடிக்கும் பானத்தையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தவிர்த்தல்” என்பது நோன்பின் பொருள்.

### லெந்து காலத்தின் பின்னணியம்:

ஆதித்திருச்சபையிலே வியாழன், வெள்ளி, சனி, உபவாச நாட்களாக கருதப்பட்டன. பின்னர் புனித வாரமாகிய ஏழு நாட்களும் உபவாச நாட்களாக கருதப்பட்டன. ரோமப் பேரரசர் கான்ஸ்டன்டைன் (முதல் கிறிஸ்தவப் பேரரசர்) கி.பி.325-ல் கூட்டிய நிசேயா மன்றத்தில் லெந்து காலம் மற்றும் உயிர்த்தெழுதல் திருநாள் ஆகியவற்றை ஆசரிக்க அரசாணை வெளியிட்டார். 5-ம் நூற்றாண்டிற்குப் பின் எல்லாக் கிறிஸ்தவர்களும் உயிர்த்தெழுதல் திருநாளுக்கு முன் 40 நாட்களுக்கு முன் சாம்பல் புதன் அன்று சாம்பலைப் பூசி நோன்பு நாளை ஆசரித்தனர். "ஆண்டவரின் முன் அனைவரும் தவறு செய்தவர்கள்" என்ற உண்மையை வெளிப்படுத்துவதாய் இது அமைந்தது. (எஸ்தர் 4:1), "சாம்பல்" சுயவெறுப்புக்கு, தங்களை தாழ்த்துவதற்கு அடையாளமாகக் கருதப்பட்டது. (யோனா 3:6-8). ஆதியாகமம் 18:27-இல் "அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்தரமாக: இதோ, தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்." என கூறுவது தாழ்மையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### லெந்துகால தொடக்க நாள்:

இந்தத் லெந்து காலத்தின் தொடக்கநாள் "சாம்பல் புதன்" (Ash Wednesday) என்று அழைக்கப்படுகிறது. கிரேக்கத்தில் "ஸ்போதோஸ்" என்ற சொல்லும், எபிரேயத்தில் "எபேர்" என்ற சொல்லும் சாம்பல் என்று பொருள். "மண்ணிலிருந்து தோன்றிய மனிதன் மண்ணிலே புதைந்து சாம்பலாகி விடுவான்" என்ற உண்மை சாம்பல் புதன்கிழமையில் உணர்த்தப்படுகிறது. முந்தின வருட குருத்தோலை ஞாயிறு அன்று பயன்படுத்திய குருத்தோலைகளைச் சேகரித்து, தவக்காலத்தின் முந்தின நாளில் அதை எரித்து, சாம்பலாக்கி, அதனைப் புனித சாம்பலாகப் போற்றி, லெந்துகாலத்தின் முதல்நாள் புதன்கிழமை வழிபாட்டில் ஆயர் மக்களின் நெற்றியில் அச்சாம்பலால் சிலுவை அடையாளமிட்டு ஆசி கூறுவது மரபு. இது கத்தோலிக்க திருச்சபைகளில் இன்றும் பின்பற்றப்படுகிறது. கிறிஸ்தவ வரலாற்றில் "சாம்பல் புதன்கிழமை" லெந்துகால உபவாச நாட்களின் ஆரம்ப நாள்.

### நாற்பது நாட்களின் முக்கியத்துவம் :

- நோவாவின் காலத்தில் 40 நாள்கள் இரவும் பகலும் மழை பூமியின் மேல் பெய்தது (ஆதியாகமம். 7:12, 17).
- 40 நாள்கள் முடிந்த பின் பேழையில் சாளரத்தை நோவா திறந்தார் (ஆதியாகமம் 8:6).
- இஸ்ரவேலர் 40 ஆண்டுகள் மன்னா உண்டனர் (யாத்திராகமம் 16: 35)

- மோசே சீனாய் மலையில் 40 நாள் தங்கியிருந்து கற்பனை, நியாயப்பிரமாணத்தைப் பெற்றுகொண்டார். (யாத்ராகமம். 24: 18 34:28, உபாகமம். 9: 9, 25).
- இஸ்ரவேலரின் உளவுகாரர்கள் கானானை 40 நாட்கள் தங்கியிருந்து உளவு பார்த்தனர். (எண்ணாகமம். 13:25).
- பெலிஸ்திய வீரர் கோலியாத் இஸ்ரவேலருக்கு எதிராக 40 நாட்கள் சவால் விட்டார். (1 சாமு. 17: 16).
- எலியா கடவுள் தந்த ஒரு நேர உணவை உண்டு, அதன் ஆற்றலால் 40 நாள்கள் நடந்து ஒரேப் என்ற கடவுளின் மலைக்கு வந்தார் (1 இராஜாக்கள். 19: 8).
- மோசே 2-ம் முறை கற்பலகை கொண்டு சென்ற போதும் 40 நாள் உணவு சாப்பிடாமல், தண்ணீர் அருந்தாமல் ஆண்டவரோடு இருந்தார் (யாத்ராகமம். 34: 28).
- இஸ்ரவேலரின் பாவச் சுமையை எசேக்கியேல் இறைவாக்கினர் 40 நாட்கள் சுமந்தார் (எசேக்கியல் 4: 6).
- நினிவே 40 நாளில் அழிக்கப்படும் என யோனா அறிவித்தார் (யோனா. 3:4).
- இயேசு கிறிஸ்து 40 நாள்கள் பாலைவனத்தில் உபவாசம் இருந்தார். (மத்தேயு 4:2)
- இயேசு கிறிஸ்து 40 நாள்கள் பாலைவனத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டார் (லூக்கா.4:2).
- உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து 40 நாள்கள் உலகத்தில் சுற்றித் திரிந்து அப்போஸ்தலருக்குக் காட்சியளித்தார்.

திருச்சபைக்கு ஒரு ஆன்மிக வசந்த காலத்தைத் லெந்துகாலமாக திருச்சபை தந்தையர்கள் உருவாக்கித் தந்துள்ளனர். லெந்துகாலம் தூய வாழ்வை உருவாக்கும் காலம் ஏழை, எளியவர் மீது கரிசனை கொள்ளும் காலம். பகிர்ந்து வாழக் கற்றுக்கொள்ளும் காலம். தீயோனை எதிர்க்கும் ஆற்றல் பெறும் காலம். லெந்துகாலத்தில் திருமறையின் வழியாக கடவுளின் வார்த்தைகளைக் கவனமாகப் படிப்பதும், தியானிப்பதும், கேட்பதும் அதன்படி வாழ்வதும் நம் மனமாற்றத்திற்கு வழிகாட்டும். உடல் சார்ந்த கட்டுப்பாடுகள் மட்டுமல்ல, உள்ளம் சார்ந்த ஆன்மீகத்தை நெறிப்படுத்துகிற இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகிற, தவறான போதனைகளைப் புறக்கணிக்கிற ஆன்மீக காலங்களாக அமைய ஆண்டவர் அருள் தருவாராக.

ஆண்டவரின் அருட்பணியில்,
அருட்பணி. எ.ஜெம்சன் ஜெபசிங்.
சபை போதகர் - இராஸ் அல் கைமா.

## விசுவாசம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! உங்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நமத்தினாலே வாழ்த்துகளையும், வந்தனங்களையும் சொல்லிக்கொள்கிறேன். நாம் தவகாலங்களுக்குள் செல்கிறோம். இந்த தவகாலத்தில் ஆண்டவரோடு இணைந்திருக்க நமக்கு தேவை "விசுவாசம்". ஆம் பிரியமானவர்களே! இந்த மாதம் "அன்பின் கனி" என்ற தலைப்பின் கீழ் சிந்திக்க இருப்பது விசுவாசத்தை பற்றி தான்.

ஒரு அழகான, செழிப்பான சிறு கிராமம். எப்போதும் பச்சைபசேல் என்ற புல்வெளி காண்போரை அதின் அழகில் கரைய செய்யும். ஆண்டுகள் பல கடந்தன. அந்த கிராமத்தின் செழிப்பு மாறி, வறுமை மேலிட்டது. ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி மழை வேண்டி ஜெபிக்க முன்வந்தனர். அதற்கான ஒரு நாளில் அனைவரும் குறிக்கப்பட்ட இடத்தில் ஒன்று கூடினர். அப்போது ஒரு சிறு பையன் மட்டும், கையில் குடையோடு வந்தான். காரணம் மழைக்காக ஜெபிக்க போகிறோம், மழை வந்துவிடும் என்ற விசுவாசம்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்வதும் அதைத்தான், "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் எதை கேட்பீர்களோ! அதை பெற்றுக் கொள்வீர்கள் என்று"! விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம். ஆம் முதலில் தேவன் உண்டென்று நம்பிக்கை வேண்டும்.

விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாம், தன் சொந்த மகனையும், கடவுளுக்காக பலி கொடுக்க முன் வந்தார்! ஆபிரகாமுக்கு ஒரு விசுவாசம் இருந்திருக்கலாம், ஆண்டவர் பிள்ளையை உயிருடன் தருவார் என்று. அப்படிபட்டதான விசுவாசம் நம் அனைவருக்கும் வேண்டும்.

என்னுடைய கர்த்தர், என்னைப் படைத்தவர், எனக்காய் யாவையும் செய்து முடிப்பவர் என்ற எண்ணத்தோடு நாம் அவரிடம் சேரும்போது, அவர் நமக்கு நல்ல நிலமாகிய இருதயத்தை தருவார். யாரோ? ஒருவருடைய வாழ்வு, சாட்சி, போதனை நமக்குள் விசுவாசத்தை கொடுத்துவிடாது. "விசுவாசம்" என்னும் எண்ணெய்யை நாம் இயேசு கிறிஸ்துவிடம் இருந்து ஒவ்வொரு நாளும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

விசுவாசத்தினால் தான் ஆபிரகாம் மகனை பெற்றுக் கொண்டார், நோவா பேழையில் காப்பாற்றப்பட்டார், இஸ்ரவேல் மக்கள் கானானை அடைந்தார்கள், யாக்கோபு காப்பாற்றப்பட்டார். இப்படி எத்தனையோ சாட்சிகள். தானியேல் தன் உயிருக்கு ஆபத்து வரும் போதும் விசுவாசிக்க தவறவில்லை. எங்கள் தேவன் காப்பாற்றாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் ஆண்டவரைத்த தவிர வேறெதையும் வணங்கமாட்டோம் என உறுதியாய் இருந்தார்கள்!

நம்முடைய வாழ்க்கையிலும் நாம் விசுவாசத்தோடு பல நேரங்களை, நாட்களை கடந்து வந்திருப்போம்! ஆனால், கடைசிவரை அந்த விசுவாசம் நமக்குள் இருக்கிறதா? என்பது தான் கேள்வி? ஈசாக்கிடம் இருந்த விசுவாசம் ரெபேகாளையும் ஆண்டவரிடம் சேர்த்தது. நகோமியிடம் இருந்த விசுவாசம் ரூத்துக்கு நல்ல எதிர்காலத்தைத் தந்தது, எஸ்தரின் விசுவாசம் ஒரு குலத்துக்கே சிறையிருப்பை மாற்றினது.

சிந்திப்போம்! இன்று நம்முடைய விசுவாசம் யாருடைய வாழ்க்கைக்கு வெளிச்சமாய் இருக்கிறது? குறைந்தபட்சம் நம் குடும்பத்துக்குள், அல்லது நண்பர்கள் மத்தியில், அல்லது கணவன் மனைவி இடையே. அப்படி இல்லை என்றால், இந்த தவகாலத்தை அதற்கென்று பயன்படுத்துவோம்! இன்னும் ஒரு அடி அவரிடம் சேர நம் விசுவாசத்தை வளர்க்க, நம்மை நாம் சீர்தூக்கி பார்க்க கர்த்தர் நமக்கு கிருபை செய்வாராக! ஆமென்!

திருமதி.வனிதா ஜெம்சன்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Miss Leah Joselyn

D/o.Mr. Prasanth Joseph & Mrs. Surya

28-12-2024

## கற்போம் கிரேக்கம் - 2

### கிரேக்க மொழியின் முதல் எழுத்து

Alpha - Α α இந்த எழுத்து ஆங்கிலத்தில் A என்ற எழுத்துக்கு ஈடானது. நம்முடைய புதிய ஏற்பாட்டில் இருந்து திருச்சபையில் அதிகமாக பயன்படுத்தும் வார்த்தையாகிய apostle - ἀπόστολος (apostólous) கிரேக்க மொழியில் இருந்து வந்ததாகும் .

பவுல் "அப்போஸ்தலன்" என்ற வார்த்தையை ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்களில் பயன்படுத்துகிறார். சில சமயங்களில் அவர் இந்த வார்த்தையை செய்தியாளர் அல்லது தூதுவன் என்ற பரந்த பொருளில் பயன்படுத்துகிறார் (2 கொலோ. 8:23, பிலி. 2:25). உயிர்த்தெழுந்த ஆண்டவரால் அப்போஸ்தல பணிக்கு நியமிக்கப்பட்டவர்களைக் குறிக்க பவுல் இந்த வார்த்தையை அடிக்கடி பயன்படுத்துகிறார். அப்போஸ்தலர்களின் போதனை இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனையின் உண்மையான விளக்கத்தை வழங்கியது. ஆதிகால கிறிஸ்தவத்தின் கருவை அப்போஸ்தலர்கள் உருவாக்கினார்கள். ஏனென்றால், கிறிஸ்துவைப் பற்றிய அவர்களின் சாட்சி ஆவியால் வழி நடத்தப்பட்டது (யோவான் 15:26-27). அவர்கள் திருச்சபையின் "தூண்கள்" மற்றும் "அடித்தளம்" (கலா. 2:9) (எபி. 2:20, வெளி. 21:14) எனக் கருதப்பட்டனர், மேலும் அவர்களின் போதனைகள் கிறிஸ்தவ நம்பிக்கை மற்றும் நடைமுறைக்கு வழிவகுத்தன. பவுல் அப்போஸ்தலத்துவத்தை ஆவியின் பரிசாகக் கருதினார் (1 கோ. 12:28) அற்புத அடையாளங்கள் மற்றும் வல்லமையான செயல்களுடன் இருந்தது (2 கோ. 12:12). பிரசங்கம் மற்றும் போதனை அப்போஸ்தல பனியின் முதன்மை பணியாக அமைந்தது. அடையாளங்களும் அற்புதங்களும், அதனை ஏற்றுக்கொண்டவரின் வாழ்வில் விளங்கிற்று.

அப்போஸ்தலர்களுக்கு பல செயல்பாடுகள் உள்ளன. ஆனால் ஒரு அப்போஸ்தலனின் முக்கிய பணி புதிய தேவாலயங்களின் அடித்தளத்தை அமைப்பது (எபே.2:20). அப்படியாக திருச்சபையின் (அஸ்திபாரம்) அடித்தளத்தைத்தையும் எல்லைகளையும் விரிவாக்க கடவுள் அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார்.

1 கொரி.12:28. அப்போஸ்தலர்களுக்கு வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் கடவுள் அவர்களுக்கு ஏற்படுத்தினார் என்பதனைக் காணலாம், அதன் வழியாக அநேக அற்புதங்களையும் இறைவார்த்தையோடு நடப்பிக்க செய்து கடவுள் அவர்கள் வழியாக செயலாற்றினார்.

1 கொரி. 3:11. இயேசு தான் திருச்சபையின் அஸ்திபாரம், அந்த அஸ்திபாரத்தை அமைக்க அவர்கள் அனுப்பப்படுவதால் அப்போஸ்தலர்கள் என்று அழைப்பது அர்த்தமுள்ளதாய் தெரியவருகிறது. வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட வெவ்வேறு வகையான அப்போஸ்தலர்கள் உள்ளனர். அவர்களும் அவர்களின் ஊழியமும் அளபெரியது. அவர்கள் கீழ்வருமாறு

### 1. ஆட்டுக்குட்டியின் அப்போஸ்தலர்கள்

கர்த்தராகிய இயேசு அவருடன் நற்செய்தியின் பணியினை செய்யத் தேர்ந்தெடுத்த முதல் பன்னிரண்டு சீஷர்கள் இவர்கள். அவர்கள் பிரிதான அப்போஸ்தலர்கள். இயேசுவின் ஊழியத்தின் போது நியமிக்கப் பட்டவர்கள்.அவர்கள் திருச்சபையின் நித்திய அடித்தளமாகிய கிறிஸ்துவை பறைசாற்றி ஊழியம் செய்த உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த ஆட்டுக் குட்டியின் முதலும் முதன்மையான அப்போஸ்தலர்கள் ஆவார்கள்.
நகரத்தின் மதிலுக்கு பன்னிரண்டு அஸ்திபாரங்களும், அவைகளில் ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலரின் பெயர்களும் இருந்தன. (வெளிப்படுத்துதல் 21:14)

### 2. பரமேற்றம் பின்பான அப்போஸ்தலர்கள்

இந்த அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசுவின் பரமேற்றம் அடைந்த பிறகு நியமிக்கப்பட்டனர், இன்றுவரை கர்த்தராகிய இயேசுவின் சுவிசேஷத்தை தொடர்ந்து அறிவிக்கிற யாவரும் இந்த வகையில் சேர்ந்தவர்கள். கர்த்தர் இன்னும் அவர்களை நியமிக்கிறார். கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தவிர, பரமேற்றம் அடைந்த பிறகு கடவுள் எழுப்பிய மிகமுக்கியமான ஆதி திருச்சபையின் அப்போஸ்தலர்கள்.

பவுல் (எபேசியர் 1:1) பர்னபாஸ் (அப்போஸ்தலர் 14:14)
எபபிரோதி (பிலிப்பியர் 2:25)
ஆண்ட்ரோனிக்கஸ் மற்றும் ஜூனியஸ் (ரோமர் 16:7)
தீமோத்தேயு மற்றும் தீத்துவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அப்போஸ்தலர்களின் ஊழியமல்லாமல் திருச்சபையின் வளர்ச்சி ஸ்தம்பித்து போகும். நம் திருச்சபை உருவாக பாடுபட்ட அப்போஸ்தலர்களின் பணியினை நாமும் தொடருவோம் , கிறிஸ்துவின் மீட்பினை அறிவிப்போம்.
கிரேக்கம் கற்போம் கடவுளை அறிவோம்

**வசனம் : ரோமர் 1:1** இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்,

கிறிஸ்துவின் சேவையில்
அருட்திரு. ராஜ் குமார் ஜான் வெஸ்லி
ஆயர் - ஃபுஜைரா தமிழ் திருச்சபை

## வேதத்தில் பெண்கள் - 2

கிறிஸ்தவத்தில், பெயர்கள் ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன மற்றும் ஆழமான அர்த்தத்தைக் கொண்டுள்ளன. அவை பெரும்பாலும் ஒரு நபரின் அடையாளம் அல்லது கடவுளுடனான அவர்களின் உறவு பற்றிய முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. எப்சிபாள் என்ற பெயரின் அர்த்தத்தையும், வேதத்தின் சூழலில் அதன் முக்கியத்துவத்தையும் ஆராய்வோம்.

### பெயர் : எப்சிபாள்

### திருமறைபகுதி : 2 இராஜாக்கள் 21:1

**செயல் :** இஸ்ரேயேல் தேசத்தின் எழிச்சியும் வீழ்ச்சியும் நேரடியாக கண்டவர். எசேக்கியாவின் மனைவி மனாசேயின் தாய், ஏசாயா தீர்க்கதரிசியால் குழந்தையாக தத்தெடுக்கப்பட்டவர்.

எப்சிபாள் என்பது பழைய ஏற்பாட்டில், குறிப்பாக ஏசாயா புத்தகத்தில் காணப்படும் ஒரு தனித்துவமான பெயர். இது ஒரு எபிரேய பெயர். இது ஏசாயா புத்தகத்தில் காணப்படுகிறது. கடவுளின் மக்கள், இஸ்ரவேலர்கள், சவாலான சூழ்நிலைகளை எதிர்கொண்டனர். அவர்கள் தங்கள் தாயகத்திலிருந்து வெகு தொலைவில் நாடு கடத்தப்பட்டு, சோதனைகளையும் சிரமங்களையும் அனுபவித்தனர். இதற்கிடையில், கடவுள் ஏசாயா தீர்க்கதரிசி மூலம் பேசினார்.

எப்சிபாள் என்ற பெயருக்கு "என் மகிழ்ச்சி அவளிடம் உள்ளது" (ஏசாயா 62:4) என்று பொருள். இது ஒரு மக்களாகவும் ஒரு தேசமாகவும் இஸ்ரேலின் மீது கடவுள் கொண்டுள்ள தயவையும் மகிழ்ச்சியையும் பற்றி தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டதாகும் . மீட்டெடுக்கப்பட்ட எருசலேமை விவரிக்க ஒரு இளம் விசுவாசியாக ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் எப்சிபாள் என்ற பெயர் பயன்படுத்தப்படுகிறது.

அவள் யூதாவின் மிகவும் நீதியுள்ள ராஜாவாகிய எசேக்கியாவின் மனைவியும், யூதாவின் மிகவும் பொல்லாத ராஜாவாகிய மனாசேயின் தாயுமாய் இருந்தாள். எசேக்கியா தனது ஆட்சியின் போது செய்த ஒவ்வொரு நீதியான சீர்திருத்தத்தையும் தனது மகன் அழிப்பதைப் பார்த்து, அவளுடைய இதயம் வேதனை அடைந்தது.

மனாசே தனது தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவில்லை. அவன் இஸ்ரவேலரை இன்னும் அதிகமாகப் பாவம் செய்ய வைத்தார். பல தீர்க்கதரிசிகள் கொடுத்த எச்சரிக்கைகளை அவன் உதறித்தள்ளி கடவுளுக்கு எதிராக நடந்தான், மனாசேயின் மூர்க்கதனமான ஆட்சியால் எதிரியின் கைகளில் பெரும் அழிவை இஸ்ரேயேல் மக்கள் அனுபவித்தார்கள்.

அப்போது எப்சிபாள் என்ற பெயரின் வழியாக கடவுள் அவரது நீடித்த உடன்படிக்கையை அவர்களுக்கு நினைவூட்டினார். தீர்க்கதரிசனமாகப் பயன்படுத்தப்பட்ட பெயர், தீர்ப்பிலிருந்து கிருபைக்கு மாறுவதைக் குறித்தது, இந்த பெயர் மீட்பின் நம்பிக்கையையும் கடவுளின் அன்பின் உத்தரவாதத்தையும் பிரதிபலித்தது. கடவுள் அவரை நம்பினோரை கை விடாமல் மீட்டெடுப்பார் என்பதனை எப்சிபாள் என்ற பெயர் நினைவூட்டுகின்றது. மானசேவால் அழிவிற்க்கு தள்ளப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை உண்டாக்கியது. ராணியாக, தாயாக, தயவுள்ள கடவுளின் வாக்குறுதிகளின் அடையாளமாக அவரது பெயர் நொடிந்து போன இஸ்ரேயேல் மக்களுக்கு நம்பிக்கையினை ஏற்படுத்தியது.

எப்சிபாள் என்ற பெயர் கொண்டவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால் கடவுள் அளிக்கும் நிபந்தனையற்ற அன்பையும் ஏற்றுக்கொள்ளுதலையும் உங்களுக்கு நினைவூட்டுகிறது, மேலும் உங்களைச் சுற்றி உள்ளவர்களுக்கு அந்த அன்பை நீட்டிக்க உங்களை ஊக்குவிக்கிறது.

கிறிஸ்துவின் சேவையில்
திருமதி பாலின் எமிமா
ஆயரம்மா, தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

# செயலர் மடல்

பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களை அதிசயங்களைச் செய்கிறவரும், ஆச்சரியமானவரும் மகா பரிசுத்தமானவருமாகிய தேவாதிதேவனுக்கு கனமும் மகிமையும் செலுத்துகிறேன். முன்சென்று செம்மையாய், உண்மையாய், பக்தியாய் நடக்க கிருபை புரிந்துவரும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். லெந்தென்னும் வசந்தகாலம் நம் ஒவ்வொருவருக்கும் ஆன்மீக வாழ்வில் புதிய துளிர்விடும் காலம். புது கிருபைகள் பெற்று மகிழும் காலம். அன்பர் பாதம் அமர்ந்து, வேத வார்த்தைகள் உணர்ந்து, கர்த்தர் அருளும் தூய ஆவியில் நிறைந்து புதுபெலன் பெற்று மகிழும் காலம். கிறிஸ்துவோடு நெருங்கி ஜெபத்தில், உபவாசத்தில் வளரும் காலம், கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவருக்கும் மேலான ஆன்மீக ஆசீர்வாதங்களைத் தந்தருளுவாராக. கடந்த இரண்டு மாதங்களிலும் திருச்சபையாக நம்மை அற்புதமாக வழி நடத்திய தேவாதி தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்தில் மாலை 7:00 மணிக்கும், சனிக்கிழமைகளில் Jebal Ali ஆலயத்தில் மாலை 7:00 மணிக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் St. Paul's Hall-ல் காலை 7:00 மணிக்கும் ஆராதனைகள் ஒழுங்காக நடைபெற கர்த்தர் கிருபை புரிந்தார். Junior Church, Cornerstone, Youth Fellowship, Mens Fellowship, Womens Fellowship, தமிழ் வகுப்புகள், முகாம் சந்திப்பு ஊழியங்கள் மற்றும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமைகளில் உபவாச ஜெபமும், Area Prayer Cell ஊழியங்கள் 15 இடங்களிலும் ஒழுங்காய் நடைபெற தேவாதி தேவன் கிருபை செய்தார். கர்த்தருக்கே மகிமை செலுத்துகிறேன்.

கர்த்தருடைய கிருபையால் 02-02-25 அன்று காலை திருவிருந்து ஆராதனையில் CSI Tirunelveli Diocese Bishop Rt. Rev. DRGST Barnabas அவர்கள் கலந்து கொண்டு தேவ செய்தி வழங்கினார்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையால் நமது சபையின் Blood Donation Camp 09-02-25 அன்று காலை 9:00 மணி முதல் Dubai Blood Donation Centre-ல் நடைபெற்றது. 180 சபையார் தங்கள் பெயர்களை Register செய்திருந்தார்கள். 155 பேர் Blood Donate பண்ணினார்கள். இதற்காக உழைத்த, ஜெபித்த அனைவருக்கும் நன்றி.

23-02-25 ஞாயிறு அன்று காலை ஆராதனையின் ஆரம்பத்தில் Karama A Prayer Cell அங்கத்தினர்கள் Praise & Worship பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். அன்று ஆராதனை பாடகர் குழுவினர் விசேஷித்த பாடல் ஆராதனையாக நடைபெற்றது. விசேஷித்த பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்திய பாடகர் குழுவினருக்கும், பாடகர் குழுவின் பொறுப்பாளர் Mrs. Nineeta Navin அவர்களுக்கும், இசை கலைஞர் யாவருக்கும், பலவிதங்களில் உதவிகள் செய்த யாவருக்கும் நன்றி செலுத்துகிறேன். 05-03-25 அன்று Ash Wednesday ஆராதனை திருவிருந்து ஆராதனையுடன் ஆலய வளாகத்தில் நடைபெறும். லெந்து கால காலை ஆராதனை 05-03-25 முதல் தினமும் காலை 6:00 மணி முதல் 6:30 மணி வரை Zoom வழியாக நடத்தப்படும். சபையார் ஜெபத்தோடு கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

நமது சபையின் VBS 2025 March 24-ம் தேதி முதல் 28-ம் தேதிவரை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது. பங்கு பெறுகின்ற பிள்ளைகள், Teachers, Volunteers யாவருக்காகவும் சபையார் ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மிஷனரி ஊழிய பாரத்தோடு நமது இந்திய தேசத்தில் நடைபெற்று வரும் 100 மிஷனரிகளை திருச்சபையாக நாம் தாங்கிட கர்த்தர் நமக்குத் தந்த கிருபைகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். மிஷனரி சிறுவர்களின் கல்வி சம்பந்தமாகவும் மற்றும் பற்பல நிலைகளில் சரீர குறைபாடுகளில் உதவிகள் செய்வதன் மூலமாகவும் திருச்சபையாக தாங்கிட கர்த்தர் பாராட்டி வரும் தயவுகளுக்காகவும், மேலும் 15 ஊழிய ஸ்தாபனங்களுக்கு உதவிகள் செய்ய கிருபை பாராட்டிய கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். கொளகூர் மிஷனரி பணிதளத்தில் நமது திருச்சபை தாங்கி வரும் மருத்துவமனை, மருத்துவ பணிகளுக்காக, அங்கு பணிபுரிந்து வரும் Dr. Melchis மற்றும் Dr. Mrs. Daphni அவர்களின் அர்ப்பணிப்புகளுக்காகவும் தொடர்ந்து பாரத்தோடு ஜெபிப்போம். சிகிச்சைக்காக கடந்து வரும் மக்களுக்காக, அவர்களின் இரட்சிப்புக்காகவும் ஜெபிப்போம்.

ஜெபத்தை செவிசாய்த்து கேட்கும் கர்த்தர், திருச்சபையாக நாம் ஏறெடுக்கும் ஜெபத்திற்கு CDA அதிகாரிகளிடமிருந்து Worship Licence மற்றும் Bank Account Open செய்ய அனுமதியும் கிடைக்க கிருபை செய்வாராக. ஜெபமே ஜெயம். Praise be to God.

Moses Vijaya Kumar, Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை, உன் சந்திரன் மறைவதுமில்லை, கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார், உன் துக்கநாட்கள் முடிந்துபோம்." ஏசாயா 60:20

கர்த்தர் ஒருவரே...
ஞானத்தின் வடிவம்
ஞானத்தை நமக்கு
தந்திடும்
அருள் நாதரும் அவரே.
அருள் கொடை
வள்ளலாய்
வான்மறை தேவனாய்
என்றுமே நிரந்தரமாய்
இயேசுவே
பரிணமிக்கிறார்.
சோகம் தீர்த்திடும்
இயேசுவின் நாமம்
அது...குறைகள் தீர்க்கும்
நிறைவை தரும்.
இயேசுவே, உமது
ஆலயம் வந்தோம்
மனமுருக ஜெபித்தோம்
கவலைகள்
மறந்தோம்
அள்ள அள்ள
குறையாதது
உமது கருணை
அன்பு பயிர்
வளர்ப்பவரே
அதற்கு ....
அருள் மழையை
நல்குபவரே
இன்பமதை தருபவரே
இனிமையாக
வாழவைப்பாரே.

இவ்உலகம்
இனிதாக...
ஒளியாக... மிளிர...
உயிர்கள் யாவும்
விழித்தெழுந்து மலர...
காரணமும்
காரியமும்
ஒருசேர அறியும்
ஆண்டவர் இயேசு
சூரிய, சந்திரனை
தோற்றுவித்தார்
விசுவாசியே ...
கர்த்தர்மட்டுமே
இம்மைக்கும்
மறுமைக்கும்
வழிகாட்டும் வானுலக
பரிசுத்தர்.
பிதாமகன் இயேசுவை
நெஞ்சில் நிறுத்தி
ஒரே மனதுடன்
துதிப்பவர்
ஜெபிப்பவர்
அன்பை பொழிபவர்
வாழ்வில்...
சூரியனும்
சந்திரனும்
அஸ்தமிக்காது
மறையாது.
எக்காலமும்
துக்கமும்
தலை தூக்காது

கர்த்தரே நமக்கு
நித்திய வெளிச்சமாக
இருக்கும்போது
மானிடரே...
இனியொரு இருள்
வாழ்வில் வருமா...
வரவே வராது.
அன்பானவரே
வேகமாக ஓடிவரும்
நீரோட்டம்
சில இடங்களில்
சில நேரஙகளில்
சுழியில் பட்டு
நிற்கிறது
அதுபோல...
இயேசுவின்
பரம பக்தனின்
இருதயமானது பல
துன்பச் சுழிகளில்
சிக்கிவிடும்
மறுகணம்
இயேசுவின்
அற்புத கருணை
தெளிந்த நீரோடையாய்
வந்து பாதை காட்டும்
இயேசுவின் அடியார்க்கு
கடும் துயர்
ஏதாவது உளதா
இல்லவே இல்லை
அபயக்கரம்
இயேசுவின்
திருக்கரமே.

அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தவக்கால உபவாசம்

வேகம் ஓடும் யோர்தானில்
தேவ நாம நீராட்டு
வேளை வந்து ஏசுநேசர்
வேக மாக யோவான்கை

காய்ந்த காடு யூதேய
நாட்டுக் காடு நீண்டுபோய்
நோம்பு போக்கி நேசர்வந்தார்
நாப்பது நாட்கள் நீண்டநாள்

பின்னே முன்னேறி ஊழியம்
தன்னால் தேடும் கூட்டங்கள்
அந்நாள் நோம்பு பற்றியோர்
தேனுரை தானுரைத் துவைத்தார்

முகத்தை வாட வைத்து
தலையைக் காய வைத்து
மனிதர் காண வைத்து
உபவாச வேட மிடுவது

பலனற்று நலனற்று நோவிடும்
பலரும் கண்டதும் கேட்டதும்
பலபல பேசியதும் கூசியதும்
மட்டும் பலனென சேந்திடும்

உன்உப வாசம் வேண்டாம்
மனிதர் கண்கள் காணவும்
உன்உப வாசம் வேண்டும்
உன்பிதா கண்கள் காணட்டும்

உன்பிதாமுன் எண்ணை பூசு
மனிதர்முன் எண்ணை பூசு
உன்பிதாமுன் முகத்தைக் கழுவு
மனிதர்முன் முகத்தை கழுவு

அந்தரங் கத்தில் பாப்பார்
வெளிய ரங்கத்தில் காப்பார்
அந்தரங் கத்து நலனுக்கும்
வெளிய ரங்கத்து பலனுக்கும்.

ஆதாரம் : மத்தேயு 3:15-16, மத்தேயு 4:2, மத்தேயு 6:16-18
கவிதை எண் : 268 கவிதை : மணிமுத்து

## திருச்சபை ஜெபநாள் 02-03-2025 (முதல் ஞாயிறு)

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்தேயு 18:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

### துதிகள்

- கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக துதிப்போம்.
- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலன், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- நம் பணிகள், தொழில்கள் மற்றும் பிரயாணங்களில் ஆண்டவர் அருளிய பாதுகாப்பிற்காக துதிப்போம்.
- பிப்ரவரி மாதம் நடைபெற்ற Blood Donation Camp, Choir மற்றும் ஆராதனைகள் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக துதிப்போம்.
- குளிர்காலத்தில் தந்துவந்த ஆரோக்கியத்திற்காக, பாதுகாப்பிற்காக ஆண்டவரைத் துதிப்போம்.

### திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்
- ஃபுஜைரா, இராஸ் அல் கைமா சபைகளின் ஊழியங்களுக்காக, சபை வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,

- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனையின் மருத்துவர்களுக்காக, அவர்கள் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
- லெந்துகாலங்களை உண்மையாய் ஆசரிக்க, ஆராதனைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளின் ஆசீர்வாதத்திற்காக

## இந்திய நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேளாண்மை (விவசாயி) களுக்காக, அனைத்து சமயத்தாரும் ஒற்றுமையாக இருக்க, மனித நேயமும், வறட்சி நீங்க, இயற்கை வளங்கள் பாதுகாப்புக்காக, மழைநீரை பாதுகாத்து பயன்படுத்த ஜெபிப்போம்.
- இந்திய அரசு பாரபட்சமில்லாமல், நடுநிலையோடு ஆட்சி செய்ய
- வேற்றுமைகள் ஒழிந்து சமத்துவம் வளர, மத தீவிரவாத அமைப்புகளின் மனமாற்றத்திற்காக
- தேசம் முழுவதும் எல்லை பாதுகாப்புக்காக
- தேசத்தில் நடைபெறும் அனைத்து மிஷனெரி ஊழியங்களுக்காக
- சட்டீஸ்கர் மாநில கிறிஸ்தவ மக்களின் பாதுகாப்பிற்காக

## ஐக்கிய அரபு நாடுகள் (UAE) தேசங்களுக்காக ஜெப வேண்டுதல்கள்

- UAE தேசங்களில் வசிக்கும் மக்கள் நல்வாழ்வுக்காக
- அரசர் குடும்பங்களுக்காக
- நல்ல வேலை வாய்ப்புக்காக, வேலை தேடி வருபவர்களுக்கு வேலைகள் கிடைக்க
- வேலை வாங்கித் தருவதாக ஆசை காட்டி அழைத்து வந்து ஏமாற்றப்படுவோருக்காக
- UAE-ல் உள்ள CSI திருச்சபை ஊழியங்களுக்காக
- UAE-ல் நடைபெறும் அனைத்து திருச்சபைகள் ஊழியங்களுக்காக
- அனைவருக்கும் ஆண்டவரின் நற்செய்திக்காக
- அனைத்து சமயத்தாரும் சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ
- சாலை விபத்துகள் தவிர்க்கப்பட, வாகன ஓட்டிகளின் பாதுகாப்புக்காக

## உலக நாடுகளுக்காக ஜெப வேண்டுதல்கள்

- உக்ரைன் - ரஷ்யா போர் சமாதானத்திற்காக
- இஸ்ரவேல், பாலஸ்தீனம், லெபனோன், ஈரான் தேசங்களுக்காக
- உலக நாடுகள் சமாதானத்திற்காக
- பருவநிலை மாற்றத்திற்காக, Forest தீவிபத்துக்கள் தவிர்க்கப்பட
- உலகம் முழுவதும் நடைபெறும் ஆண்டவரின் திருப்பணிக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் தேவ கிருபைக்காக ஜெபிப்போம்.
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக ஜெபிப்போம்.
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத்திற்காக மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக ஜெபிப்போம்.
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்.
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெறவும் ஜெபிப்போம்.
- கல்வி கற்றுவரும் எல்லா மாணவர்களுக்காகவும், உயர்கல்விக்காக தாயகம் மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- ஒவ்வொரு வாரமும் நடைபெறுகின்ற camp ஊழியங்களுக்காக
- CDA அங்கீகாரத்திற்காக, Dubai தேசத்தில் CSI Tamil Parish ஆலயம் எழுப்ப ஜெபிப்போம்.
- தொழில் மற்றும் வேலைவாய்ப்புக்காக பிற நாடுகளுக்கு பயணம் செய்யும் நமது திருச்சபை மக்களுக்காக ஜெபிப்போம்.
- புதிதாக திருமணமானவர்கள் மற்றும் கணவன் மனைவி சரியான புரிந்துகொள்ளுதலுக்காக, குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.
- மார்ச் மாதம் நடைபெறும் Womens Retreat மற்றும் VBS 2025 ஊழியங்கள் ஆசீர்வாதமாக அமைய ஜெபிப்போம். VBS Director, Team Members, Teachers, Volunteers மற்றும் பங்குபெறும் பிள்ளைகளின் பிரயாண பாதுகாப்புக்காக ஜெபிப்போம்.

# வேதவினா போட்டி - மார்ச் 2025

## பெரியோர்களுக்கான வேதவினா போட்டி

(அப்போஸ்தலர் 11-20)

கீழ்கண்ட வினாக்களுக்கு அப்போஸ்தலர் 11-20 அதிகாரங்களிலிருந்து விடைகளை எழுதி 20-ம் தேதிக்குள் போதகருக்கு அனுப்பினால், அனைத்து வினாக்களுக்கும் சரியான விடை எழுதுபவர்களின் பெயர் தூதன் புத்தகத்தில் வெளியிடப்படும்.

1. அகபு யார்?
2. பிரசங்கம் செய்த ராஜா யார்?
3. அழிவைக் கண்டது யார்? காணாதது யார்?
4. எதன் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.?
5. இருதயம் சுத்தமாக்கப் படுவது எதனால்?
6. பவுலும், பர்னபாவும் பிரிந்தது எதனால்?
7. பவுலின் காயங்களை கழுவினது யார்?
8. மார்ஸ் மேடை எங்குள்ளது?
9. மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டது யார்?
10. தீமோத்தேயுவின் ஊர் எது?

## NEW MEMBERS LIST

| No | Name | Mem. No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. Abishek Rajamani | 3096 | Dubai |
| 2 | Mr. Jackson Dharmaraj Mani | 3097 | Dubai |
| 3 | Mr. Jebin Job | 3098 | Dubai |
| 4 | Mr. Williams Paul Daniel | 3099 | Dubai |
| 5 | Mr. Deril Daniel | 3100 | Dubai |
| 6 | Mr. Jenish Roch | 3101 | RAK |

## பிப்ரவரி 2025 வேதவினா போட்டி விடைகள்

1. பெலன், சாட்சியான வாழ்வு. (அப்போஸ்தலர் 1:8)
2. கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிறவன். (அப்போஸ்தலர் 2:21)
3. மோசே (அப்போஸ்தலர் 3:22)
4. சீப்புரு தீவை சார்ந்தவன்.
   பர்னபா - ஆறுதலின் மகன் என அழைக்கப்பட்டவன்.
   (அப்போஸ்தலர் 4:36)
5. அனனியா (அப்போஸ்தலர் 5:3)
6. ஸ்தேவானின் முகம் (அப்போஸ்தலர் 6:15)
7. சாட்சியின் கூடாரத்ததை (அப்போஸ்தலர் 7:44,45)
8. சமாரியர் (அப்போஸ்தலர் 8:14)
9. ஐனேயாவுக்கு (அப்போஸ்தலர் 9:34)
10. அடித்துப் புசி, பேதுருவுக்கு (அப்போஸ்தலர் 10:13)

## நித்தியத்தில் நுழைந்தவர்கள்..

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபை அங்கத்தினர்
Mrs. Rita Stefan அவர்களின் தகப்பனார்
Mr. Johnson அவர்கள் 31.01.25 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mrs. Deepa Johnson அவர்களின் தகப்பனார்
Mr. Jeyaraj அவர்கள் 04.02.25 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mrs. Sheeba Nirmala Andrew அவர்களின் தாயார்
Mrs. Nalini Schwartz அவர்கள் 16.02.25 அன்றும்
நமது சபை அங்கத்தினர்
Mr. Ravindran மற்றும் Mr.Das Prabhakar அவர்களின் தாயார்
Mrs. Gladis Durairaj அவர்கள் 25.02.25 அன்றும்
கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

## பிப்ரவரி 2025 வேதவினா போட்டி பதில் எழுதியவர்கள்

1. திருமதி. ஷெலினா அஷோக்
2. திருமதி. அனித்தா ஆல்வின்
3. திருமதி. வாலண்டினா செல்லப்பா
4. திருமதி. ஐரிஸ் பொன்கிறிஸ்டோபர்
5. திருமதி. சத்திய வினோதா கிறிஸ்டோபர்
6. திருமதி. ஜெனிபர் ஜாஸ்மின்
7. திருமதி. நிர்மலா பேட்ரிக்
8. திருமதி. சத்தியா மார்ட்டின்
9. திருமதி. ஜோயல் ரோஸி
10. திருமதி. பெமி டார்வின்
11. திருமதி. கிருபா ஜான்சன்
12. திருமதி. செல்லா ஆலன்
13. திருமதி. ரூபி ஞான காந்தி
14. திருமதி. ஜெனிபா அருண்ராஜா
15. திருமதி. கோகிலா பிரியா சாம்
16. திருமதி. ஜெரிபா விவேக்
17. திருமதி. மெர்சி ஜேம்ஸ்
18. திருமதி. லதா ராஜன்
19. திருமதி. ரோஸ்லின் ஜெயகுமார்
20. திரு. டேவிஸ் ஜெயக்குமார்
21. திருமதி. பெனிலின் ஜெபின்
22. திரு. V. மோகன்
23. திருமதி. மெர்லின் விஜில்
24. திருமதி. ஜெயகிருபா சாலொமோன்
25. திருமதி. ஷீபா சிகாமணி
26. திருமதி. ஷெலின் ஜூலியா
27. திருமதி. விஜிதா ஷாஜன்
28. திருமதி. ஷீஜா ஜெயசிங்
29. திருமதி. இனிதா ஜோனா
30. திருமதி. சில்வியா டேவிட்
31. திருமதி. மரோலின் நிக்சன்
32. திருமதி. ரோஸ்லின் இம்மானுவேல்
33. திருமதி. ஜூலி ஆஷா ஹெரோல்ட்
34. திருமதி. அனிதா ஜெயராஜ்
35. திருமதி. டெய்ஸி பிரியா
36. திருமதி. ஷாமினா பென்னி
37. திருமதி. சாந்திலின் சால்பின்
38. திருமதி. புனிதா தாஸ்
39. திருமதி. அபிதா அனிஷ்
40. திருமதி. சோபியா ராணி ஜெயசேகர்
41. திருமதி. ஜாக்குலின் ஜெடிடியா
42. திருமதி. ஷிபு அர்ஜுனன்

# தெரிந்து கொள்வோம்

## பாடல் பிறந்த வரலாறு

அருள்திரு. வி.டி.சகாயம்



அருள்திரு. வி.டி.சகாயம் அவர்கள் 1904-ம் ஆண்டு ஜனவரி 28-ம் நாள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தோட்டவாரம் என்னும் ஊரில் திரு. வேதநாயகம் திருமதி.ஞானவடிவு என்பவர்களின் மகனாகப் பிறந்தார்.

